செய்தி வெளியீடு எண்.106 நாள் 17.02.2017

**திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் இன்று (17.02.2017) நடைபெற்றது.**

~~~~~

மாவட்ட ஆட்சியர் தனது உரையில், திருவள்ளுர் மாவட்டத்தில் இதுவரை சொர்ணவாரி பருவத்தில் நெற் பயிரில் 26525 ஹெக்டெரும், சம்பா பருவத்தில் 51026 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 5799 ஹெக்டெரும், சொர்ணவாரி பருவத்தில் திருந்திய நெற்பயிரில் 19064 ஹெக்டெரும். சம்பா பருவத்தில் திருந்திய நெல் பயிர் 36423 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 4158 ஹெக்டெரும், கரும்பு நடவில் 1071 ஹெக்டெரும், கரும்பு மறுதாம்பில் 5162 ஹெக்டெரும். பயறுவகை பயிர்களில் 8096 ஹெக்டெரும், எண்ணைய்வித்துக்கள் 6357 ஹெக்டெரும் சிறு தானியங்கள் 1038 ஹெக்டெரும், பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். திருவள்ளுர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 89705 ஹெக்டெர் ஆகும். இவற்றில் வர்தா புயலர் காரணமாக 32240.9211 எக்டேர் பரப்பளவில் பாதிப்படைந்த நெற்பயிர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6114.8 எக்டேர் பரப்பளவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு கணக்கெடுக்கும் பணி முடிவுற்று அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.2,72,17,453 பிரிமியத்தொகை நிறுவனத்திடம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த பயிர் காப்பீடு திட்டத்தில் 30367 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இது சம்மந்தமாக வர்தா புயல் மற்றும் வறட்சி போன்ற இயற்கை இடர்பாடு காரணத்தினால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொண்டு மகசூல் கணிப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் அனைத்து அறுவடை மகசூல் விவரங்கள் பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட காப்பீடு நிறுவனத்திற்கு அனுப்பி உரிய இழப்பீடு விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வர்தா புயலால் பாதிக்கப்பட்ட சவுக்கு மரங்களை ஆய்வு செய்து 978 ஹெக்டேர் பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது பரிசீலனையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. திருவள்ளுர் மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பாசன நீர் பற்றக்குறை உள்ள கிராமங்களில் நெற்பயிறுக்கு பதிலாக பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய பரிந்துரை செய்யப்பட்டு சிறப்பு சலுகை தொகுப்பு மானியமாக 1 ஏக்கருக்கு ரூபாய் 2000 வீதம் விதை உட்பட வேளாண் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது பாசன நீர் சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற சொட்டு நீர் பாசனம் மழை தூவான் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்தா.

விவசாயிகள் விவசாய பயன்பாட்டிற்காக ஏரிகளில் இருந்து வண்டல் மண் எடுப்பது தொடர்பாக மாவட்ட அரசிதழில் பிரசுரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் அதன் மூலம் ஒரு விவசாயி 5 லோர்டுக்கு மிகாமல் வண்டல் எடுப்பதற்கு உண்டான விதி முறைகள் மற்றும் சமர்ப்பிக்கும் ஆவணங்களை பற்றி விவரங்களை விவசாயிகளுக்கு உதவி இயக்குநர் (கனிமவளம்) அவர்கள் தெரிவித்தார். நீர் ஆதார நிலைகளை பாதுகாக்க குடிமராமத்து திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 2016-17-ம் நிதியாண்டிற்கு ரூபாய்100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் கீழ் திருவள்ளுர் மாவட்டத்தில் இந்தியாண்டில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 49 ஏரிகளில் பணியிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஏரிகளில் பணிகள் மேற்கொள்ள விவசாயிகளின் பங்களிப்பாக 10% வழங்கவேண்டும், இப்பங்களிப்பு பணம், பொருள் அல்லது உடல் உழைப்பாகவோ அளிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டது.
~~~~~

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏரிகள் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்களையும் பராமரிப்பு தேவைப்படும் ஏரிகளின் விவரங்கள் மேற்காணும் பட்டியலில் சேர்க்க தேவைப்படின் அவ்விவரங்களை செயற்பொறியாளர் கொசஸ்தலை மற்றும் ஆரணியாறு அவர்களிடம் அளிக்க கேட்டுகொள்ளப்பட்டது.

2015-16 ஆம் ஆண்டுகளில் பிடித்தம் செய்யப்பட்ட பயிர்காப்பீடு தொகை வழங்கவும் கேட்டனர். பயிறு வகை பயிர்களின் விதைகள் போதிய அளவில் இருப்பு வைக்கவும், வர்தா புயல் நிவாரணத் தொகை வழங்கியதில் நடைபெற்ற முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுக்கவும் ,வர்தா புயலால் பாதிக்கப்பட்ட சவுக்கு மற்றும் தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்கவும் கரும்பு நிலுவைத் தொகை வழங்கவும் குறுகால கடனை மத்திய கால கடனாகவும், மத்திய கால கடனை நீண்டகால கடனாக மாற்றவும் மேய்க்கால் புறம்போக்கு,அரசு புறம்போக்கு மற்றும் நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றவும் பொதுப்பணிப்பணித்துறையின் மூலம் பழுதடைந்த மதகுகள் மற்றும் பாசன கால்வாய்களை சீர் அமைக்கவும் கேட்டுக்கொண்டனர்.

மேலும் பொன்னேரி பகுதிகளில் அனுமதி இன்றி செயல்படும் வண்ண மீன் மற்றும் இறால் பண்ணைகளை அகற்றவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கவும் கொசஸ்தலையாற்றில் நடைபெறும் மணல் கொள்ளையை தடுக்கவும் சாய்ந்துள்ள மின் கம்பங்களை சரிசெய்யவும் வர்தா புயலால் சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரணம் வழங்கியதில் நடைபெற்ற முறைகேடுகளின் மீது நடவடிக்கை எடுக்கவும் மயான பாதை ஆக்கிரமிப்புகளை அகற்றவும் இருளர் இன மக்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து தரவும் காலியாக உள்ள கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்பவும் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் சாகுபடி பரப்பினை அடங்கலில் பதிவு செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்.

பின்னர் கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு முருகவேல், மாவட்ட ஆட்.சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு சுரேஷ் ஜோ குமார் பிரைட், சார் ஆட்சியர். பொன்னேரி திரு வி.பி.தண்டபாணி வருவாய் கோட்ட அலுவலர் திருமதி திவ்யஸ்ரீ (திருவள்ளுர்). திரு விமல்ராஜ் (திருத்தணி). திரு வீரப்பன் (அம்பத்தூர்), அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்**